19.11.2024

<u>கூடுதல் அமர்வு நீதிமன்றம்(விரைவு நீதிமன்றம்) விழுப்புரம்.</u>

<u>அமர்வு வழக்கு எண். 20 /2019</u>

அ.சா. 18

| | | | |
|---|---|---|---|
| பெயர் | எம்,பிரகாஷ் | | |
| த/பெ | மண்ணாங்கட்டி | | |
| கிராமம் | விழுப்புரம் | தொழில் | |
| தாலுக்கா | விழுப்புரம் | வயது | 44 /2024 |
| மாவட்டம் | விழுப்புரம் | தேதி | |

இன்று உதவியாளர் அவர்களால் சத்திய பிரமாணம் செய்விக்கப்பட்டு விசாரிக்கப்படுகிறார்.

<u>முதல் விசாரணை</u>

நான் தற்போது மேற்படி விலாசத்தில் வசித்து வருகிறேன். நான் தற்போது பிரம்ம தேசம் காவல் நிலைய ஆய்வாளராக பணி செய்து வருகிறேன். கடந்த 27/06/2018 ந் தேதி திருக்கோவிலூர் வட்டம் டி.எடைப்பாளையம் கிராமத்தை சேர்ந்த முகமது இப்ராகிம் மகன் சம்சுதீன் என்பவர் நிலையம் ஆஜராகி கொடுத்துக்கொண்ட எழுத்துபூர்வமான புகாரை பெற்று அன்று இரவு 8 மணிக்கு நிலைய கு.எண். 528/2018 இதச பிரிவுகள் 302 ன் படி முதல் தகவல் அறிக்கை பதிவு செய்தேன். பதிவு செய்து அசல் முதல்தகவல் அறிக்கையை உளுந்தூர்பேட்டை நீதித்துறை நடுவர் எண்.2 க்கு முறையாக அனுப்பி வைத்தேன். அந்த அச்சு முதல் தகவல் அறிக்கை அ.சா.ஆ.13 ஆகும். நகல்களை உயர்அதிகாரிகளுக்கும் முறையாக அனுப்பிவைத்தேன். வழக்கு கோப்பினை விசாரணைக்காக ஆய்வாளரின் பார்வைக்கு வைத்தேன். இது சம்மந்தமாக என்னை ஆய்வாளர் விசாரணை செய்தார்கள்.

<u>2 ம் எதிரி தரப்பு குறுக்கு விசாரணை</u>

சம்பவம் 27/06/2018 அன்று நடந்தது என்றால் 14.20 முதல் 18.25 மணி வரை நடந்தது. புகார் எனக்கு இரவு 8 மணிக்கு கொ டுக்கப்பட்டது. நான் உடனே முதல் தகவல் அறிக்கை தயார் செய்துவிட்டேன். அதை நான் 28/06/2018 ந் தேதியில் காலை 7 மணிக்குஅனுப்பினேன் என்றால் சரிதான். இந்த காலதாமதத்திற்கு காரணம் எதாவது சொல்லியுள்ளேனா என்றால் சொல்லவில்லை. அதே போல் புகார் கொடுத்ததற்கு ஏற்பட்ட காலதாமதத்திற்கு எதாவது காரணம் சொல்லியுள்ளேனா என்றால் இல்லை. முதல் தகவல் அறிக்கை கணினி மூலமாக தயார் செய்யப்பட்டது என்றால் சரிதான். அதை யார் கணினியில் தட்டச்சு செய்தது என்றால் காவல் நிலையத்தில் உள்ள காவலர் மூலம் தயார் செய்யப்பட்டது. அந்த விவரங்கள் முதல் தகவல் அறிக்கையில் இல்லை என்றால் மேல் அதிகாரிகள் விசாரிக்கும் போது அது தெரியும். என்னை விசாரிக்கும் போது நான் அதை சொல்லவில்லை. முதல் தகவல் அறிக்கையில் கலம் எண். 3 சில் பொது நாள் குறிப்பு பற்றி விவரம் எதுவும் குறிப்பிடவில்லை என்றால் சரிதான். புகார்தாரரின் கையெழுத்தை நான் முதல் தகவல் அறிக்கை 14 வது கலத்தில் பெறவில்லை என்றால் சரிதான். எந்த தேதியில் எத்தனை மணிக்கு புகாரை நான் நீதிமன்றத்திற்கு அனுப்பினேன் என்ற விவரம் புகாரில் குறிப்பிடபடவில்லை என்றால் தேதி மட்டும் குறிப்பிடப்பட்டுள்ளது. நேரம் குறிப்பிடபடவில்லை. புகாரில் எதிரிகள் பெயர் எதுவும் குறிப்பாக தெரிவிக்கப்படவில்லை என்றால் சரிதான். நான் ஆய்வாளர் வழக்கை விசாரிக்கும் போது உடன் இருந்தேனா என்றால் சிலசமயம் இருந்தேன் சிலசமயம் இல்லை. நான் அவர்கள் கொடுத்த தவறான புகாரை வைத்து சரிவர விசாரிக்காமல் எனது மேல் அதிகாரிகளுக்கு அனுப்பிவிட்டேன் என்றால் சரியல்ல.

**5 ம் எதிரி தரப்பு குறுக்கு விசாரணை**

புகார் கொடுத்தது காவல் நிலையத்தில் அல்ல என்றும் அதனால்தான் முதல் தகவல் அறிக்கையில் கையெழுத்து பெறப்படவில்லை என்றால் சரியல்ல. (மற்ற 2 ம் எதிரி தரப்பு குறுக்கு விசாரணையை 5 ம் எதிரி தரப்பில் தமதாக ஏற்றுக்கொள்ளப்பட்டது.

**1,3,4 எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை**

**மேற்படி 2,5 எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை 1,3,4 எதிரிகள் தரப்பில் தமதாக ஏற்றுக்கொள்ளப்பட்டது.**

**மறு விசாரணை**

**இல்லை.**